**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

SOP. No:22/2025 நாள்: 23.02.2026

மசா.1, திருமதி.விஜய்தா

**மசா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் தொகையை கேட்டு எதிர்மனுதாரர்கள் அலுவலகத்திற்கு மனு செய்திருந்தேன். தொகையை நாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டி என் கணவர் உயில் ஆவணம் போன்று ஏதேனு எழுதிக்கொடுத்துள்ளாரா என்று கேட்டால் இல்லை. மேற்படி எதிர்மனுதாரர்கள் அலுவலகத்தில் எங்களை என் கணவர் நாமினியாக நியமனம் செய்து மனு கொடுக்கவில்லை. என் மாமனாரை நாமினியாக காண்பித்திருந்தார் என் மாமனாரும் காலமாகிவிட்டார். மனுவில் உள்ள 1ம் மனுதாரர் என் மாமியார். 3ம் மனுதாரரர் என்னுடைய மைனர் மகள். மனுதாரரை தவிர வேறு வாரிசுகள் உள்ளாரா என்று கேட்டால் இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 23rd day of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.